புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# செவ்வியல் இலக்கியங்களில் திணைசார்; பொருளியல் (குறிஞ்சி, முல்லைத் திணைகளை முன்வைத்து)

முனைவர் அர. கண்ணன்
உதவிப்பேராசிரியர்,
இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,
சூலூர், கோவை – 641402

ஆய்வுச்சுருக்கம்

உலக மொழிகள் வரலாற்றில் இயற்கையோடு இணைந்த இலக்கியங்களாகத் திகழ்பவை தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் எனலாம். இவ்விலக்கியங்கள் காலந்தோறும் புதுப்புது எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. சங்ககாலம் தமிழர்களின் பொற்காலமாகத் திகழ்ந்தது. மக்கள் இனக்குழுவாக வாழ்ந்து வந்தாலும் தனக்கென அரசுகளை நிறுவினர். அவ்வரசுகள் நிலத்திற்கேற்றவாறு அமைந்து சீரிய முறையில் அரசாட்சி செலுத்தி வந்தன. பழந்தமிழர்கள் இயற்கையோடு இணைந்திருந்தனர். ஆதலால் அவர்கள் முதல், கரு, உரிப் பொருளோடு இணைந்து வாழ்வாதாரத்தைப் பெருக்கினர். திணை அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொண்டு அதற்கேற்ற வகையில், தொழில்களைச் செய்து பொருளாதாரத்தைப் பெருக்கினர். அரசுருவாக்கம் அமைந்த பின்னர், பொருளாதாரம் அறம் சார்ந்து கட்டமைக்கப்பட்டது. மக்களின் வாழ்வியல் நிலப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டாலும், அதிலிருந்து கிடைக்கும் வருவாய் அரசுடன் இணைந்தது. பொருள்கள் மக்கள் வாழ்வில் ஈடில்லா மகிழ்ச்சியைத் தந்தன. செவ்வியல் இலக்கியங்கள் பொருளியலை திணை, அரசு, குடி, தொழில், வருவாய் என கட்டமைத்துக் கொண்டன. இத்தகைய பழந்தமிழர்தம் பொருளியல் சிந்தனைகளை விளக்குகின்ற வகையில் ‘செவ்வியல் இலக்கியங்களில் பொருளியல்

பொருள்:

சங்ககால வாழ்க்கை நெறிகள் அகம், புறம் எனும் இரு பகுப்பினுள் அடங்குகின்;றன. சங்க அகப் பாடல்களும், புறப்பாடல்களும் சங்ககால அரசியல், சமூகம், பொருளாதாரம் பற்றிய நிலைகளை ஒரு நிலையில் ஓரளவு விளக்குவனவாய் அமைந்துள்ளன. அகம், புறம் எனும் இரு திணைப் பாகுபாடுகளும், சமுதாய வளர்ச்சிப் போக்கோடும், மாற்றங்களோடும் நெருங்கிய தொடர்புடையனவாய் உள்ளன. பொதுவாக இரு திணைகளும் மக்கள் நிலத்தோறும் நிலைத்து வாழ்ந்த சங்ககாலச் சமுதாயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் காட்டுவனாய் அமைந்துள்ளன.

இலக்கிய உருவாக்கத்திற்கு அடிப்படையாய் அமைவது பொருள். இதனை,

“அறமுத லான்கென்றும் அகமுத லான்கென்றும்
திறனமைந்த செம்மைப் பொருண்மேல் - குறைவின்றிச்
செய்யப்படுதலால் செய்யுள், செயிர்தீரப்
பையத் தாம் பாவுதலால் பா”

யாப்பருங்கலம் விருத்தி , மேற்கோள், ப.220

என யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பா மொழியும், இது பொருளின் முதன்மையை உணர்த்துகிறது.

பொருள்: சொல் - விளக்கம்

பொருள் எனும் சொல்லிற்கு, "வஸ்து, சொற்பொருள், விஷயம், உண்மைக் கருத்து, காரியம், தத்துவம், மெய்ம்மை, நன் மதிக்கப்படுவது, கல்வி, அறிவு, கொள்கை, பயன், மோட்சம், கடவுள், திரவியம், பலபண்டம், பொன், புத்திரன், தந்திரன், சுணங்கு, உவமேயம், உறுதி, அருந்தாபத்தி, அகமும், புறமுமாகிய திணைப் பொருள், அர்த்த சாஸ்திரம், தலைமையான ஒன்று, உடைமை, பொருள் நூல், தன்மை, குணம்"2
ஆகிய பொருள்களை அகராதிகள் தருகின்றன.

தமிழில் பொருள் இலக்கியம்.

பொருள் என்பது பல தொகுதிகளை உண்டாக்கியது. தனிமனித வாழ்வும், சமுதாய வாழ்வும் சிறக்க வேண்டுமெனில் பொருளினை ஈட்டுதல் என்பது பழந்தமிழர் தம் கடமையாக இருந்துள்ளது. மக்களும், அரசும் பொருதளின் வழி கிடைத்த செல்வத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்தினர்.

பொருள் என்றால் என்ன என்பதற்கு தொல்காப்பியம் விளக்கம் தருகிறது.
"செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றாகப் பொருளைக் குறிக்கும் தொல்காப்பியம்."3

-தொல்.பொருள். நூ.31

பொருளை,

"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி
இதுவாகித் திணைக்கு உரிப்பொருள் எண்ணது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப"

தொல் - பொருள்.509

என்று விளக்குகிறது தொல்காப்பியம்.

இன்பம், துன்பம், புணர்வு, பிரிவு, ஒழுக்கம் என்னும் இவை பிறழாது, இது இத்திணைக்கு உரிய பொருள் எனாது பொதுவாய் நிற்றல் பொருள் என்பது இதன் கருத்து.

'பொருளாதாரம் என்பது இன்று ஒரு பெருங்கலையாக வளர்ந்துள்ளது. சங்க காலத்தில் தமிழர்தம் பொருளியல் கருத்துக்கள் கலையினது கட்டுக்கோப்பைப் பெறவில்லை எனினும், அவர்தம் கருத்துக்கள் இக்காலப் பொருள் நூல்கள் கூறும் கருத்து நுட்பங்களுக்குப் பேரளவு ஈடுகொடுக்கத் தக்கவை என்பது ஒருதலை' என்பர்.

நா.பாலுசாமி, சங்க இலக்கியத்தில் பொருளியல் (கட்டுரை) ப.122.

தொல்காப்பியர் சுட்டும் பொருளியல் இரு கண்ணோட்டங்களைக் கொண்டதாக அமைகிறது.

"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே"

என்றும்,

"அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப"

-பொருளியல். 213, 214

என்றும்; கூறுவதால், உலகியல் வழக்கின்படி செய்யுள் அமைதல் தேவை என்றும், அவ்வாறு உலக வழக்கின்பற் படுங்கால், அப்பொருள் அறத்திற்கு ஊறு செய்வதாயின் அதனை நீக்குதல் வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

செவ்வியல் நூல்களில் பொருளியல் கோட்;பாடு

சங்க இலக்கியம் செவ்வியல் பண்புகள் பலவற்றிற்கும், இடம் தந்து நிற்கிறது. செவ்வியல் பண்புகளைச் சுருக்கமாகத் தொன்மையுடைமை, தலைமையுடைமை, மரபுடைமை, காலவரையறையுடைமை, பாடுபொருள் முடிவுறும் தன்மை, மகிழ்வுறுத்தலும், அறிவுறுத்தலும்,யாப்பமைதி, மாந்தர் படைப்பு, இயற்கைப் புனைவும்,கற்பனையும், தொன்மை மரபுக் கூறுகள் என்பன போன்று பல கூறுகளாகப் பகுக்கலாம்.

செவ்வியல் நூல்களில் காணலாகும் பொருளதில் கோட்பாடுகள் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

பொருளியல்

| அகவாழ்வில் | புறவாழ்வில் |
|---|---|
| நிலவளமும் பொருளும் | போர் விழைதல் |
| கூற்றும் பொருளும் | அரசுருவாக்கம் |
| பொருள் தேடுதல் | பொருளீட்;டல் |
| பொருளின் பயன் | வருவாய் ஈட்டல் |
| பொருளை விற்றல் | மக்களுக்கு வழங்கல் |
| பண்டமாற்று | அரசும் - பொருளும் |
| தொழில் பரிவுகள் | செலவிடுதல் |
| பொருளும் - மக்களும் | அறத்தின்வழி பொருளியல் |

*நிலவியலும் - ஐந்திணை மக்களும்:*

*மனித வாழ்க்கைக்கு நிலமும், பொழுதும் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன. இதனை அறிந்த தொல்காப்பியர், அகப்பொருள் இலக்கணத்தில் முதல், கரு உரி மூன்றையும் படைத்தார்.*

*“மனித வாழ்வின் அடித்தளமான நிலத்தையும், காலத்தையும் இலக்கணம் ‘முதற்பொருள்’ என்று சுட்டும். முதற’பொருளின் இணைப்பில் உருவாகும் பயிh வகைகள். விலங்குகள். பறவைகள் போன்றவையெல்லாம் ‘கருப்பொருட்கள்’ என வழங்கப்படுகின்றன. கருப்பொருள் கொண்டு நடத்தும் ‘வாழ்க்கை நெறி’‘உரிப்பொருள்’ என்று வழங்கப்படுகின்றது” என்பர்.*

*ச.வேலுமணி, சங்ககால ஆயர் வாழ்வியல். ப.10*

*“உலகில் பல்வேறு நிலவியற்கூறுகள் இடம்பெறுகின்றன. அதுபோலவே தமிழக நிலப்பரப்பில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலவியற் கூறுகளைக் காண முடிகின்றது. “ஒரு நாட்டின் இயற்கை’ சூழலுக்கும், அதன் இலக்கியத்துக்கும் நெருக்கமான உறவு உண்டு. தமிழிலக்கியத்தில் அடிப்படையானதொரு கூறாக அமைந்துள்ள ஐத்திணைப் பாகுபாடு, வட இந்திய இலக்கியத்தில் காணப்படாமைக்கு நிலவியற்கையே காரணமாகும”; என்பர்.*

*அ.தட்சிணமூர்த்தி, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப.21*

*நிலவியற்கையைப் பொறுத்து மக்களின் உணவும், தொழிலும் இன்னபிற செயல்பாடுகளும் மாறுவதை, இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. குறிஞ்சிக் குறவர்கள், முல்லைக் கோவலர்கள், மருத உழவர்கள், நெய்தல் பரதர்கள், பாலை மறவர்கள் என நிலவியற்கை மக்களின் வாழ்வியலை அடையாளப் படுத்துகின்றது.*

*தொல்காப்பியர் நான்கு வகையான நிலவியல் கூறுகளையும், அதனையொத்த வாழ்வியல் உண்மைகளையும் தெளிவுபடக் கூறுகின்றார். முதல், கரு, உரி மூன்றையும் மையப்படுத்தி இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். தனிமனிதனின் குடும்ப வாழ்க்கையை “அகவாழ்க்கை” எனவும், மனிதனின் சேர்க்கையான சமுதாய வாழ்க்கையைப் ‘புறவாழ்க்கை’ எனவும் குறிப்பிடுகிறார்.*

*இன்றையச் சூழலிலும் மனித சமுதாய வாழ்வியல் முறைகள் நிலந்தோறும் வேறுபட்டு, சமச்சீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இவ்வேறுபாடு இலக்கியத்தில் வாழ்வியல் இனங்களுக்கு முரண்பட்டும், இயைந்தும் உள்ளதையும் உணரமுடிகின்றது.*

*குறிஞ்சிச் சூழலும் பொருளும*

*மலைவாழ் மக்கள் பகல், இரவு என்று தன் வேலைகளைப் பிரித்துக் கொள்வர். பகற்பொழுதில் தேன் எடுத்தல், கிழங்குகளை அகழ்தல், உழவு செய்தல், தினை விதைத்தல், தினை அறுத்தல், தினை குற்றுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். உடல் சுமை கருதிப் பெண்கள் தினை காத்தல், தினை குற்றுதல், சமையல் செய்தல், குழந்தை வளர்ப்பு போன்றவைகளைச் செய்கின்றனர். ஆண்கள் இரவில் தினைப்புனத்தைக் காத்தும், வேட்டையாடியும் தங்கள் தொழில்களைச் செய்து வந்ததை குறுந்தொகைப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன.*

*பழந்தமிழர்ப் பாடல்கள் அனைத்திலும் இயற்கை குறித்தான சிந்தனைகள் மேலோங்கியிருந்தன.*

*"மலரீட்டங்ளின் மாய வண்ணங்களைப் புலவர்களின் காட்சிப்புலன் ஊடுருவிச் செல்லும். அசைந்தாடும் பூங்கொடியின் அழகு பாடலிலே அவர்களின் செவிப்புலன் திளைக்கும். விரிந்த மலர்களின் பட்டிதழ்களின் மென்மையைத் தொடாமல் தொட்டுணரும் புலவர்களின் பொறியும் புலனும் கனிகளின் மனத்திலே மலர்களின் மணத்திலே இன்னும் இயற்கை அன்னை வழங்கும் எண்ணற்ற விருந்துத் கூட்டுகளிலே திளைக்கும். அவர்களின் நுட்பத்துக்கு நுட்பமாகிய கவிநெஞ்சும் இத்துணையளவு இயற்கைக்கு இடம் அளித்தும், இயற்கை என்ற சொல்லோ அதற்கு இனமான பிரிதொரு சொல்லோ ஓர் இடத்தும் குறிக்கப்படவேவில்லை" என்று கூறுவர்;.*

*கலைக்கதிர், பழந்தமிழ் இலக்;கியத்தில் இயற்கை பெறுமிடம், ப. 69*

*குறிஞ்சிச் சூழல் என்பது உயரமான மலைகளும், சிகரங்களும், குன்றுகளும் நிறைந்த மலைப்பகுதியாகும்.உயர்ந்த மலையில் கடும் மழை பெய்ததால் கடலலைப் போல் பொங்கிய அருவிநீர் மலையிலிருந்து விழும் சூழல் காண்பவர்களுக்கு மனமகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும் அளித்தது. இவ்வியற்கைச் சூழலின் குளிர்ச்சியும், இதமும் காதல் கொண்ட உள்ளங்களில் அகமலர்ச்சியைத் தோற்றுவித்தன என்பதை,*

*"நாள்மழை தலைஇய நல்நெடுங் குன்றத்து*
*மால்கடல் திரையின் இழிதரும் அருவி*
*அகலிருங் கானத்து அல்குநணி நோக்கி*
*தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு" – நற்.17*

*என்ற பாடலடிகள் விளக்குகின்றன.*

*குறிஞ்சிநில மக்களின் முக்கியத் தொழிலாக தேனெடுத்தல், கிழங்கெடுத்தல் போன்றவை காணப்பட்டன.*

*"உணவு தேடும் நிலையில் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள், குளிர் மற்றும்; மழைக்காலங்களில் சூழலிலிருந்து காத்துக்கொள்ளும் பொருட்டு இயற்கையாக அமைந்;த மரப்பொந்துகளையும், குகைகளையும் தற்காலிகமாக தங்கும்; இடமாகப் பயன்படுத்தினர். கால்நடை வளர்ப்பும், ஏர்புனச் சாகுபடியும் தொடங்கப்பட்டதால் செம்பாதி நாடோடி நிலைக்கு மாற்றமுற்ற மனிதன் தற்காலிகத் தங்குமிடங்களைப் புலம்பெயரும் இடங்களில் அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இலக்கியங்களில் இவை இருக்கை, குரம்பை,குடி, மனை, இல், அகம் எனும் பெயர்களால் சுட்டப்படுகின்றன" என்பர்.*

*வீ.மாணிக்கம், தமிழர் வாழ்வியல், ப.288*

*குறிஞ்சி நிலத்தில் உணவு சேகரிக்க, விலங்குகளை வேட்டையாட இனக்குழுவாகச் சேர்ந்து செய்வது எளிமையாக இருந்தது. குறிஞ்சிநிலத்தில் இடம்பெறும் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல். காடுகளை எரித்துதப் பயிர் செய்ல், கால்நடைகளை வளர்த்தல் போன்ற செயல்பாடுகள் பழைய கற்காலத்திலும் இடம்பெறுதலைக் காண முடிகின்றது.*

*கானவர்கள் பகல்,இரவு என் தன் வேலைகளைப் பிரித்து செய்துள்ளனர். பகற் பொழுதில் தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், உழவு செய்தல், தினை விதைத்தல், தினை அறுத்தல், தினை குற்றுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களைச் செய்கின்றன.*

*குறவர்கள் மான், முயல், உடும்பு, நரி, யானை, காட்டுபன்றி போன்றவற்றை வேட்டையாடிய செய்த இலக்கியத்தில் உள்ளது. வேட்பை; பொருட்களைத் தம் இனக்குழுக்களுடன் சேர்ந்து பகிர்ந்து உண்டனர் என்பதை,*

*"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து*
*எல்லு முயல் எறிந்த வேட்டுவன் போல*
*பல்வேறு பண்டத் தொடைமறந்து இல்லதத்து*
*இருமடைக் கள்ளின் இன்கறி செருக்கும்" – நற். 59*

*என்;ற பாடலடிகள் காட்டுகின்றன.*

*இயற்கை வளம் நிறைந்த மலைப்பகுதியில் கனிமவளம் செழிப்புற்றிருந்தது. யானைகளைக் கோடுகளுக்காக கொன்றதையும், கோடுகளையும் பாறைகளில் உலர வைத்ததையும்,*

*"… … … … … … ..யானை*
*நற்கோடு நயந்த அன்பில் கானவர்" – நற்.65*

என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

வில்லின் அம்பு தொடுத்து வேட்டையாடுதலை,

"கல்லுடைக் குறும்பின் வாயவில்லிட
நிணவரிக் குறைந்த நிறுத்த அதர்தொறும்;" – அகம்.31

என்ற பாடலடிகளும், நாய்கள வேட்டையாடுதலுக்குப் பயன்படுத்தியதை,

"ஒட்டுஇயல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட" – அகம்.182

என்ற பாடலடிகளும் காட்டுகின்றன.

வேட்டைத் தொழில் செய்த நேரம் தவிர, மற்ற வேளைகளில் குறவர் தேனெடுக்கும் பணியைச் செய்தனர். இயற்கை மருந்தான தேன் கானவர் வாழ்வில் முக்கியப் பங்கு வகித்தது என்பதை,

"தீம்தேன் கொள்பவர் வாங்கு புரியும்
யாணர் வைப்பின் கானம் எணிண்" – நற்.292
"அவ்வரைத் தேனின் இறாலென ஏணி
இழைத்திருக் கானக நாடன்" – கலி.39

என்ற பாடலடிகள் விரித்துரைக்கின்றன.

கானவர் காடுகளில் வள்ளிக்கிழங்கு, கவலைக் கிழங்கு போன்றவற்றை அகழ்ந்தெடுப்பர். இதனை,

"கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி" – குறு.233

என்ற பாடலடி விளக்குகிறது.

மலைகுறவர் பயிர் செய்ததில தினைப்புனம் குறித்த செய்தியை மிகுதியாக இடம் பெற்றுள்ளது. தினைப்புனக் காவலில் ஆண்களும், பெண்களும் ஈடுபட்டனர். இதனை,

"……………………..பெருங்குரல் ஏனல்
கனிபட விளைந்தமை யறிந்துந் செல்கென" – அகம். 302
"கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை: - நற்.22

என்னும் அடிகள் விளக்குகின்றன.

இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் ஐவனநெல், தினை, வரகு, மூங்கிலரிசி, கிழங்கு வகைகள், தேன், கனிகள் இறைட்சி என்பவற்றை உணவாகக் கொண்டும் தங்கள் வாழ்க்கையை நடத்தினர்.

முல்லையும் பொருளும்

முல்;லை நிலப் பொது மக்களை ஆயர், ஆய்ச்சியர், என்பர். காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை எனப்பட்டது.

முல்லைநில மக்களின் பெயர்களை திவாகர நிகன்டு "முல்லையாளர், கோவலர், இடையர், பொதும்பர், ஆண்வல்லோர், குடவர், பாலர், தொறுவர், கோவிந்தர், அண்டர்,கோபாலர்,ஆயர், அமுதர், ஆய்ச்சியர், தொறுவியர், பொதுவியர், குடத்தியர், இடைச்சியர், என்றவாறு குறிப்பிட்டுள்ளது.

திவாகர நிகண்டு, பெயர்தொழுதி, ப. 40

ஆயர்வாழ்க்கை முழுவதும் ஆநிரைகளோடு சித்தரிக்கப்படுகின்றது. ஆநிரையைப் பேணிப் பாதுகாத்தலும், பால் பொருட்களைப் பயன்படுத்துவதையும் முழுமையாகக் கொண்டிருந்தனர்.

முல்லை நிலத்திற்குரியவர்களாக உழவர் பெருமக்கள் திகழ்ந்தனர். ஆயரது வாழ்வியல் வைகறை, காலை, பகல், மாலை, இரவு என ஐந்து காலச் சூழலியலும் விளக்கப்பட்டுள்ளது. நீர் நிறைந்த சூழலில் முல்லை 'மென்புல' மாகவும், நீர் அருகியநிலையில் 'வன்புல' மாகவும், மலையையொட்டி அமைந்த பகுதி 'புன்புலமாக', கருதப்படுகின்றன. முல்லை நில வாழ்வியலும் வரலாற்றறிஞர் கூறும் புதிய கற்கால மக்கள் வாழ்வியலும் ஒப்புநோக்கத் தக்கதாக உள்ளது.

முல்லை நிலப் பொதுமக்களை ஆயர், ஆய்ச்சியர் என்பர். காடும், காடுசார்ந்த பகுதியம் முல்லை எனப்பட்டது. கார்காலமும், முல்லை மலர்தலும், ஆநிரை மேய்த்தலும், தலைவி ஆற்றயிருத்தலும் முல்லை நிலப் பாடுபொருளாகப் பெரும்பாலும் இடம்பெறுகின்றது.

*புதிய கற்காலத்தில் கற்களை விரும்பிய வடிவில்அமைத்துக் கொண்டனர். யானை செய்ய அறிந்திருந்தனர். தாழிகள் தானியச் சேகரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டதோடு, மரணச் சடங்குகளிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கால்நடை வளர்ப்பும், புராதன விவசாயமும் தோன்தின.*

*1. உணவு சேகரிப்போர் உற்பத்தியாளராய் மாறினர்.*

*2. விலங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் வரை விவசாயமும், கால்நடை வளர்ப்பும் இணைந்து சென்றன.*

*3. சில வேட்டைக்; குழுவினர் கால்நடை வளர்ப்பையும், விவசாயத்தையும் துணையாகக் கொண்டனர்.*

*4. வேட்டையில் நிலைபெற்றவர் தமது வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவில்லை.*

*5. கால்நடை வளர்ப்பு, விவசாயம் ஆகியவற்றில் ஆடவர் பங்கு முக்கியமாயிற்று. தந்தை வழிச் சமுதாயம் மலர்ந்தது என்பாரின் கருத்துப்படி முல்லை நில மக்களின் நிலவியல் சார் தொழில்முறைகளை அறியமுடிகிது.*

*ஆயர்களது வாழ்க்கை ஆநிரைகளை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. பாலைக்காற்று வந்து வீட்டில் கொடுத்துவிட்டு உணவு பெற்றுச் செல்வதை,*

*"பாலொடு வந்து கூழொடு பெயரும்"*
*யாடுடை யிடை மகன்"* – *குறு.221*

*என்ற பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.*

*ஆயர் மகளிர் காலைப் பொழுதில் மோரை விற்பவர். மோர் விற்ற விலைக்கு நெல்லைப் பண்டமாகப் பெறுவர். மேலும் நெய் விற்ற விலைக்கு எருமை மற்றும் நல்ல கன்றுகளை வாங்கித் தம் மன்றுகளில் நிறைப்பர், மோர் விற்கும் செயலை,*

*"பேரூரஞ் சிற்றூருஞ் கௌவை ஏயடுப்பவள் போல்*
*மோரொடு வந்தாள்... ... ... ... ... .* – *கலி. 109*
*"... ... ... ... ... ... ... . அமைமாறி யாம்வருஞ்*
*செல்வம்... ... ... ... ... ... "* – *கலி.106*

*என்ற பாடலடிகளும், கடகப் பெட்டியில் மோருக்கு மாற்றாகப் பல்வேறு வகையான நெல்லைப் பெற்றதை,*

*"வரிக்கூழ வட்டி தழிஇ"... ... ... ...* *கலி.109*

*என்ற பாடலடியும் தெளிவுறுத்துகின்றன.*

*உழவுத்தொழில்*

*முல்லை நிலத்து மக்கள் பால் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யவில்;லை. பயிரிடுத் தொழிலையும் செய்யக்கூடிய ஆயர்கள் இருந்;ததை இலக்கியங்கள் பகிர்கின்றன.*

*"உழவுத்தொழில் வளர்ச்சியை விதையர்,முதையல், என்ற சொற்களின் ஆட்சியால் ஆயர், ஆடு, மாடுகளை மட்டும் மேய்த்தலோடு உழவுத் தொழிலும் முன்னேற்றம் கண்டனர் என்பதைப் புலப்படுத்தும் என்றும், உழவன் நிறைவு நிலை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் அமைகின்றன" என்பர்.*

*கு. இராசத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், ப.70*

*முல்;லை நிலத்துதப் பொதுமக்கள் உழவுத்தொழிலுக்கு முன்னோடியாகத் திகழ்ந்ததை,*

*"விதையர் கொன்ற முதையல் நழி"* – *நற்.121*
*"முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்*
*விதைக்குறு வட்டி போதாடு பொன"* – *குறு.155*
*"குறுஞ்சாட்டு உருளையொடு கலப்பை சாத்தி*
*நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்"* - *பெரும்.188-189*

*என்ற பாடலடிகள் சித்தரிக்கின்றன.*

*இயற்கைத் துன்பங்கள் மற்றும் மாற்றாரின் செயற்கை இடர்;பாடுகளோடு எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். முல்லை ஆயர்கள் வாழ்வு ஓரளவு நிலை பெற்றும், சிறிது நாடோடித் தன்மை இணைந்தும் இயற்கைச் சூழல் நெருங்கி இருந்;தமையை சங்க இலக்கியங்கள் வழி உணர முடிகின்றது.*

*"முல்லை நிலத்து மக்கள் பால் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யாமல் பயிரிடுத் தொழிலையும் செய்யக்கூடியவர்களாக விளங்கினர். உழவுத்தொழில் வளர்ச்சியை, விதையர், முதையர் என்ற சொற்களின் ஆட்சியால் ஆயர், ஆடு, மாடுகளை மேய்த்தலோடு, உழவுத்தொழிலும் முன்னேற்றம் கண்டனா.; உழவின் நிறைவுநிலை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களிலும் அமைகின்றன என்றும் விளக்குவர்..*

*கு. இராசரத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், ப.70*

*இதன்மூலம் முல்லை நில மக்களின் தொழில் திறத்தையும், குடும்பச்சூழலையும் அறிய முடிகிறது.*

*முல்லை நில ஆயர்களின் வாழ்வியல் பொருளியல் சார்ந்த அமைந்துள்ளதையும், கால்நடை வளர்ப்பும், உழவுத்தொழிலும், பால்பொருட்களை விற்றலும், முல்லை நில மக்களின் பொருளியல் தேவைகளை நிறைவு செய்தன என்பதையும் செவ்வியல் நூல்கள் வழி அறிய முடிகிறது.*

- *மனித வாழ்ககையின் அடிப்படைக்கு உறுதுணையாக பொரள் என்றும், பொரள் என்பதற்கு பல்வேறு பொருள்கள் சுட்டப்பட்டுள்ளதையும் காணமடிகிறது. மனித வாழ்க்கைக்கு நிலமும், பொழுதும் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன.*
- *இன்றையச் சூழலிலும் மனித சமுதாய வாழ்வியல் முறைகள் நிலந்தோறும் வேறுபட்டு, சமச்சீரற்ற நிலையில் காணப்படுகின்றது.*
- *பழந்தமிழர்ப் பாடல்கள் அனைத்திலும் இயற்கை குறித்தான சிந்தனைகள் மேலோங்கியிருந்தன.*
- *குறிஞ்சிநிலத்தில் இடம்பெறும் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல். காடுகளை எரித்துதப் பயிர் செய்ல், கால்நடைகளை வளர்த்தல் போன்ற செயல்பாடுகள் பழைய கற்காலத்திலும் இடம்பெறுதலைக் காண முடிகின்றது.*
- *குறிஞ்சி நிலத்தில் ஐவனநெல், தினை, வரகு, மூங்கிலரிசி, கிழங்கு வகைகள், தேன், கனிகள் இறைட்சி என்பவற்றை உணவாகக் கொண்டும் தங்கள் வாழ்க்கையை நடத்தினர்.*
- *ஆயர்வாழ்க்கை முழுவதும் ஆநிரைகளோடு சித்தரிக்கப்படுகின்றது. ஆநிரையைப் பேணிப் பாதுகாத்தலும், பால் பொருட்களைப் பயன்படுத்துவதையும் முழுமையாகக் கொண்டிருந்தனர்.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********